இனிமையான குழந்தைகளே - நீங்கள் கர்மயோகி ஆவீர்கள். கர்மம் செய்கையிலும் தந்தையின் நினைவில் இருங்கள். நினைவில் இருப்பதால் எந்தவொரு விகர்மமும் ஆகாது.

கேள்வி: தந்தையிடம் புத்தியோகம் ஈடுபடாமல் இருப்பதற்கு முக்கியமான ஒரு காரணம் உள்ளது - அது என்ன?

பதில்: பேராசை. எந்தவொரு அழியக் கூடிய பொருட்களின் மீது பேராசை இருந்தது, சாப்பிடுவது அல்லது அணிவதில் அதிக விருப்பம் இருந்தது என்றால், புத்தி தந்தையிடம் ஈடுபட முடியாது. எனவே பாபா விதி கூறுகிறார். குழந்தைகளே, எல்லையில்லாத தந்தையிடமிருந்து ஆஸ்தி யைப் பெறுவதற்கான பேராசை கொள்ளுங்கள். மற்றபடி எந்தவொரு பொருளின் மீதும் பேராசை கொள்ளாதீர்கள். இல்லையென்றால் எந்த பொருள் மீது அதிகமான அன்பு இருக்குமோ, அதே பொருள் கடைசியிலும் நினைவிற்கு வரும். மேலும் பதவி இழிந்ததாக ஆகி விடும்.

பாடல்: மணமக்களே விழித்தெழுங்கள் .. .. ..

ஓம் சாந்தி. இப்பொழுது இதுவே குழந்தைகள் அறிந்துள்ளார்கள். பார்க்கப் போனால் முழு உலகத்தில் எல்லோருமே நாங்கள் அனைவரும் எங்களுக்குள் சகோதர சகோதரர்கள், என்று கூறுகிறார்கள் - வி ஆர் ஆல் பிரதர்ஸ். ஆனால் நாம் தந்தையின் குழந்தைகள், என்பது தான் அந்த ஆத்மாக்களுக்குப் புரிய வருவதில்லை. அவர் படைப்புக்கர்த்தா ஆவார். நாம் படைப்பு ஆவோம். நாம் சகோதரர்கள் ஆவோம் என்று மிருகங்களோ கூறாது. மனிதர்கள் தான் புரிந்திருக்கிறார்கள். மேலும் நாங்கள் அனைவரும் சகோதரர்கள், என்று கூறவும் செய்கிறார்கள். படைப்பவரான தந்தை ஒருவரே ஆவார். அவர் பரமபிதா பரமாத்மா என்று கூறப்படுகிறார். அப்படியின்றி சகோதரிக்கு சகோதரன் என்று கூறுவது என்பது முடியாது. அனைவரும் தங்களை ஆத்மா என்று புரிந்திருக்கும் பொழுது தான் நாம் நமக்குள் சகோதர சகோதரர்கள் என்று கூறுவார்கள். ஆத்மாவைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. ஒரு தந்தைக்கு உடல் ரீதியாக இத்தனை குழந்தைகளோ இருக்க முடியாது. இப்பொழுது நாம் நமக்குள் சகோதர சகோதரர்கள் ஆகிறோம் என்பது உங்களுக்கு நல்ல முறையில் நினைவிருக்கிறது. தந்தை வந்து குழந்தைகளுக்கு கற்பிக்கிறார். பகவான் கூறுகிறார் - ஹே குழந்தைகளே! என்று. எனவே அநேகருக்கு படிப்பிக்கிறார் அல்லவா? ஹே அர்ஜுனா! என்று மட்டும் கூற மாட்டார். ஒருவருடைய பெயரை மட்டும் எடுப்பதில்லை. அனைவருக்கும் கற்பிக்கிறார். பள்ளிக் கூடத்தில் ஆசிரியர் குழந்தைகளே ! நல்ல முறையில் படியுங்கள் என்று கூறுவார் அல்லவா? இருப்பதோ மாணவர்கள். ஆனால் ஆசிரியர் பெரியவராக, முதியவராக இருப்பதால் மாணவர் களை குழந்தைகளே, குழந்தைகளே என்பார். அங்கு யாரும் தங்களை ஆத்மா என்று புரிந்திருப் பதில்லை. அங்கோ உலகீய சம்பந்தம் தான் இருக்கும். எப்படி காந்தி அடிகளுக்கு தேசபிதா என்ற பதவி கொடுத்துள்ளார்கள்! மேயரைக் கூட நகர தந்தை என்று கூறுகிறார்கள். இது போல நிறைய பேருக்கு பதவி கொடுக்கிறார்கள். இங்கோ நீங்கள் ஆத்மாக்களாகிய நாம் சகோதர சகோதரர்கள் என்பதைப் புரிந்துள்ளீர்கள். எனவே சகோதரர்களுக்கு தந்தை அவசியம் வேண்டும். அவர் நமது தந்தை

ஆவார். அவரை காட்ஃபாதர் என்று கூறுகிறார்கள் என்பதை அனைத்து ஆத்மாக்களும் அறிந்திருக்கிறார்கள். எனது காட்ஃபாதர் என்று கூறுவது ஆத்மா ஆகும். லௌகீக தந்தையை காட் (இறைவன்) என்று கூறமாட்டார்கள். நாம் ஆத்மா ஆவோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். பாபா நமக்கு கற்பிக்க வந்துள்ளார். அதாவது பதீதர்களை (தூய்மையற்றவர்களை) பாவனமாக ஆக்க வந்துள்ளார். நம்மை பதீத நிலையிலிருந்து பாவனமாக ஆக்கி பிறகு பாவன உலகத்திற்கு அதிபதியாக ஆக்குகிறார். இந்த விஷயங்களை யாருமே அறியாமல் உள்ளார்கள். இங்கு குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருந்தும், பிறகு கர்மம் செய்யும் பொழுது மறந்து விடுகிறீர்கள். நினைவில் இருந்தீர்கள் என்றால் விகர்மம் ஆகாது. நீங்கள் கர்மயோகியாக இருக்கவே இருக்கிறீர்கள். சந்நியாசிகளினுடையது கர்ம சந்நியாசம் ஆகும். பிரம்ம தத்துவத்தோடு மட்டும் யோகம் கொள்கிறார்கள். ஆனால் நாள் முழுவதுமோ யோகம் கொண்டிருக்க முடியாது. பிரம்மத்தில் செல்வதற்காக யோகம் கொள்கிறார்கள். பிரம்மத்தை நினைவு செய்வதால் நாம் பிரம்மத்தில் கலந்து போய் விடுவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் நாள் முழுவதுமோ பிரம்மத்தை நினைவு செய்ய முடியாது. மேலும் அந்த நினைவினால் விகர்மங்களும் விநாசம் ஆவதில்லை. பதீத பாவனர் என்று பாடப்பட்டுள்ளது. அவரோ தந்தையே ஆவார். பதீத பாவன பிரம்மம் அல்லது பதீத பாவன தத்துவம் என்றோ கூறுவதில்லை. அனைவரும் தந்தையைத் தான் பதீத பாவனர் என்று கூறுகிறார்கள். பிரம்மத்தை யாரும் தந்தை என்று கூறுவதில்லை. பிரம்மத்தின் தவம் கூட யாரும் செய்வதில்லை. சிவனோடு தவம் செய்கிறார்கள். சிவனின் கோவிலும் உள்ளது. தத்துவத்திறகு கோவில் அமைக்க முடியுமா என்ன? பிரம்மத்திலோ முட்டைகள் போல ஆத்மாக்கள் இருக்கிறார்கள். எனவே சாஸ்திரங்களில் பிரம்மாண்டம் என்று கூறி உள்ளார்கள். இது ஒன்றும் பெயர் கிடையாது. அது வீடு ஆகும். எப்படி ஆகாய தத்துவத்தில் எத்தனை சாகார மனிதர்கள் இருக்கிறார்கள், அதே போல அங்கும் பின் ஆத்மாக்கள் இருக்கிறார்கள். பாபாவிடமிருந்து நாம் நாடகத்தின் முதல், இடை, கடை பற்றிய ஞானம் பெற்று முழு இரகசியங்களை அறிந்து கொண்டு முழு விருட்சத்தின் ஞானத்தைப் புரிந்து கொண்டு மாஸ்டர் விதை ரூபம் ஆகி விடுகிறோம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். பரமபிதா பரமாத்மாவிடம் முழு ஞானம் இருக்கிறது. நாம் அவரது குழந்தைகள் ஆவோம். அவர் வந்து புரிய வைக்கிறார். இந்த கல்ப விருட்சத்தின் உற்பத்தி, பாலனை மற்றும் அழிவு எப்படி ஆகிறது. உற்பத்தி என்று கூறுவதால் புதிய உலகத்தினை உற்பத்தி செய்கிறார் என்று ஆகிறது. ஸ்தாபனை என்ற வார்த்தை சரியானது. பிரம்மா மூலமாக பதீதர்களை (தூய்மையற்றவர் களை) பாவனமாக ஆக்குகிறார். பதீத பாவனர் என்ற வார்த்தை அவசியம் வேண்டும். சத்யுகத்தில் எல்லோரும் சத்கதியில் இருக்கிறார்கள். கலியுகத்தில் எல்லோரும் துர்க்கதியில் இருக்கிறார்கள். ஏன், எப்படி துர்க்கதி ஆகியது? இது யாருக்குமே தெரியாது. அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் ஒருவர் ஆவார் என்று பாடவும் செய்கிறார்கள். இது ஒரு நாடகம் என்பதை ஆத்மா புரிந்திருக்கிறார். தந்தையை சதா சிவன் என்று மகிமை பாடுகிறார்கள். சுகம் அளிக்கக் கூடிய சிவன் - துக்க ஹர்த்தா, சுக கர்த்தா (துக்கத்தை நீக்கி, சுகம் அளிப்பவர்) என்று பாடவும் செய்கிறார்கள். பாரதத்தில் இலட்சுமி நாராயணரின் இராஜ்யம் இருந்தது. இப்பொழுதோ இல்லை. இலட்சுமி நாராயணரை பகவதி பகவான் என்று கூறுகிறார்கள். அவர்களுடைய இராஜதானியை யார் ஸ்தாபனை செய்தார்? பகவான் நிராகாரமானவர் ஆவார். அவரிடமிருந்து ஆத்மாக்கள்

ஆஸ்தியைப் பெறுகிறார்கள். ஆத்மா தான் 84 பிறவிகள் எடுத்து எடுத்து விழுந்து கொண்டே வருகிறது. விழுந்து விழுந்து துர்க்கதியை அடைகிறது. பரமாத்மா எங்கும் நிறைந்தவர் (சர்வவியாபி) அல்ல என்ற இந்த விஷயத்தைப் புரிய வைக்க வேண்டும். அந்த தந்தை சத்கதி அளிக்கும் வள்ளல் ஆவார். நாம் அனைவரும் சகோதர சகோதரர்கள் ஆவோமேயன்றி, அனைவரும் தந்தைகள் அல்ல. அவ்வாறு கூற முடியுமா என்ன ! தந்தை சகோதரர்களின் ரூபத்தைத் தரித்திருக்கிறாரா? இல்லை. எனவே பரமபிதா பரமாத்மா உடன் உங்களுக்கு என்ன சம்பந்தம் உள்ளது என்பதைமுதலில் கூறுங்கள். லௌகீக சம்பந்தத்தையோ அனைவரும் அறிந்துள்ளார்கள். ஆத்மாக்களினுடையவர் நிராகார தந்தை ஆவார். அவருக்கு ஹெவென்லி காட் ஃபாதர் என்று கூறுகிறார்கள். ஃபாதர் (தந்தை) அவசியம் புதிய படைப்பிற்கு அதிபதியாக ஆக்கி இருக்கக் கூடும். இப்பொழுது நாம் அதிபதி இல்லை. நாம் சுகமுடையவர் களாக இருந்தோம், துக்கமுடையவர்களாக ஆக்கியது யார்? இது யாருக்கும் தெரியாது. அரை கல்பமாக இராவண இராஜ்யம் நடந்துள்ளது. அதனால் பாரதத்திற்கு இந்த நிலைமை ஆகி உள்ளது. பாரதம் பரமபிதா பரமாத்மாவின் ஜென்ம பூமி ஆகும். பாரதத்தில் பகவான் வருகிறார். அவசியம் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்திருக்கக் கூடும். சிவஜெயந்தி கூட கொண்டாடப்படுகிறது. நாங்கள் இன்னாருடைய பிறந்த நாள் கொண்டாடிக் கொண்டிருக் கிறோம் என்று நீங்கள் எழுதவும் செய்யலாம். பின் இவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று மனிதர்கள் ஆச்சரியப்படுவார்கள். வாழ்த்துக்களும் கொடுங்கள். நாங்கள் பதீத பாவனர், சத்கதி அளிக்கும் வள்ளல், பரமபிதா பரமாத்மா சிவனின் ஜெயந்தி கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்று கூறுங்கள். அந்த நாள் மிகவும் விமரிசையாகக் கொண்டாட வேண்டும். அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளலின் ஜெயந்தி குறைவான விஷயமா என்ன? ஆகாய விமானத்தின் மூலமாகத் துண்டு பிரசுரங்களை பெரிய பெரிய நகரங்களில் வீழ்த்த வேண்டும். பின் பத்திரிகைகளிலும் வெளி வரும். மிகவும் அழகழகான கார்டுகள் தயாரிக்க வேண்டும். மிகவும் அன்பிற்குரிய தந்தைக்கு நிறைய மகிமை எழுத வேண்டும். பாரதத்தை மீண்டும் சொர்க்கமாக ஆக்க வந்துள்ளார். அதே தந்தை இராஜயோகத்தை கற்பித்துக் கொண்டிருக்கிறார். ஆஸ்தி கூட அவரே அளிக்கிறார். சிவ ஜெயந்தியின் கார்டுகள் மிகவும் ஆடம்பரமாக அச்சடிக்க வேண்டும். பிளாஸ்டிக் மீதும் அச்சடிக்கலாம். ஆனால் இன்னுமே சிறிய புத்தி உடையவர்களாக இருக்கிறீர் கள். ராஜா ராணியோ கோடியில் ஒருவர் ஆகிறார். மற்றபடி யார் கவனக்குறைவாக இருக்கிறார்களோ, அவர்கள் அவசியம் பிரஜைகளாக ஆகிறார்கள். மாலை 108 னுடையதாகும். மற்றபடி பிரஜைகளோ நிறைய பேர் ஆவார்கள். அப்படியின்றி நாமோ கவனக் குறைவாக இருக்கிறோம் என்பதல்ல. நிறைய முயற்சி செய்ய வேண்டும். பாபா நிறைய புரிய வைக்கிறார். ஆனால் அமலுக்கு கொண்டு வருவது அரிதாக உள்ளது. இங்கு தங்களை அல்லாவின் குழந்தைகள் என்று நினைக்கிறார்கள். வெளியில் வெளியேறிய உடனே மாயை உல்லூ - ஆந்தை போல ஆக்கி விடுகிறது. அந்த அளவிற்கு மாயை கடுமையானதாகும். இராஜ்யம் எடுப்பவர்கள் குறைவாக வெளிப்படுகிறார்கள். சந்திர வம்சத்தினரையும் கூட நாம் தோல்வி அடைபவர்கள் என்று கூறுவோம். நீங்கள் அனைவருடைய படிப்பு மற்றும் பதவியை அறிந்துள்ளீர்கள். உலகத்தில் இராமசந்திரனின் பதவியை யாராவது அறிந்திருப்பார்களா? பாபா நல்ல முறையில் புரிய வைக்கிறார். எப்படி நாம் மனிதர்கள் ஆச்சரியப்படும் வகையில் சிவஜெயந்திக்காக முதல்தரமான

அழைப்பிதழ் தயாரிக்கலாம்? சிந்தனைக் கடலைக் கடைதல் என்று பாடப்பட்டுள்ளது. சிவபாபா சிந்தனைக் கடலைக் கடைய வேண்டுமா என்ன? இது குழந்தைகளினுடைய வேலையாகும். பாபா தரும் ஆலோசனை யாராவது ஒருவருடைய புத்தியில் வருகிறது. ஆனால் வேலை செய்யவில்லை என்றால் பாபா அவரை அனுபவ மற்றவர் என்று கூறுவார்கள். பரமபிதா பரமாத்மா நம்மை பிரம்மா மூலமாக விஷ்ணுபுரிக்கு அதிபதியாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். சங்கரன் மூலமாக விநாசம் ஆக வேண்டி உள்ளது. திரிமூர்த்தி மேலே நின்றுள்ளார்.

நீங்கள் அனைவரும் ஆன்மீக யாத்திரையைக் கற்பிக்கக் கூடிய வழிகாட்டிகள் ஆவீர்கள். சத்திய மேவ ஜெயதே... என்று நீங்கள் கூட எழுதலாம். உண்மையில் சத்தியமான பாபா நமக்கு வெற்றி பெறுவதற்குக் கற்பிக்கிறார் அல்லது வெற்றி அடையுமாறு செய்விக்கிறார். யாராவது ஆட்சேபணை செய்தால் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். சிவ ஜெயந்தி எப்படி கொண்டாட வேண்டும் என்று. பாபாவிற்கு சிந்தனை எழுந்தது. கீதையின் பகவான் சிவன் ஆவார், கிருஷ்ணர் அல்ல என்பது பற்றி நிறைய பிரசாரம் செய்ய வேண்டும். அவர் படைப்புகர்த்தா. அவர் படைப்பு, ஆஸ்தி யாரிடமிருந்து கிடைக்கும்? ஸ்ரீகிருஷ்ணர் முதல் படைப்பு ஆவார். கடலில் ஆல் இலையில் கிருஷ்ணர் மிதந்து வந்தார் என்று காண்பித்துள்ளார் கள். இது கர்ப்ப மாளிகையின் விஷயமாகும். சொர்க்கத்தில் கர்ப்ப மாளிகையில் ஆனந்தம் இருக்கும். இங்கு நரகத்தில் கர்ப்ப சிறையில் துடிக்கிறார்கள். சத்யுகத்தில் கர்ப்ப மாளிகை, கலியுகத்தில் கர்ப்ப சிறை இருக்கும். கிருஷ்ணரின் படம் எவ்வளவு நன்றாக உள்ளது. நரகத்தை எட்டி உதைத்து கொண்டிருக்கிறார். கிருஷ்ணருடைய 84 பிறவிகளும் எழுதப் பட்டுள்ளது. பகவான் கூறுகிறார், நீங்கள் உங்களது ஜன்மங்களைப் பற்றி அறியாமல் உள்ளீர்கள். நான் உங்களுக்குக் கூறுகிறேன். எனவே யார் முழுமையாக 84 பிறவிகள் எடுத்துள்ளார்களோ, அவர்களுக்குத் தான் புரிய வைக்கிறேன். எவ்வளவு சுலபமானது ஆகும். கூடவே நல்ல நடத்தையும் வேண்டும். எல்லையில்லாத தந்தையிடமிருந்து ஆஸ்தி பெறுவதற்கான பேராசை கொள்ள வேண்டும். வேறு எந்த பொருள் மீதும் பேராசை கொள்ளக் கூடாது. எனவே நமது புத்தி எந்தவொரு பொருளின் மீதும் செல்லாத அளவிற்கு அப்பேர்ப்பட்ட எந்த பொருளையும் தங்களிடம் வைக்கக் கூடாது. இல்லையென்றால் பதவி இழிந்ததாக ஆகி விடும். தேக சகிதம் எதெல்லாம் உள்ளதோ, அவை அனைத்திலிருந்தும் புத்தியை நீக்கி விட வேண்டும். ஒரு தந்தையை நினைவு செய்ய வேண்டும். யாராவது மனிதர் நிறைய வீட்டு சாமான்கள் வைத்திருப்பவராக இருந்தார் என்றால், இறக்கும் நேரத்தில் அவை நினைவிற்கு வந்து கொண்டே இருக்கும். எந்த பொருள் மீது அதிகமான அன்பு இருக்குமோ, அது கடைசியில் அவசியம் நினைவிற்கு வரும். எந்தவொரு பொருளையும் பேராசைக்கு வசப்பட்டு ஒளித்து வைக்காதீர்கள் என்று தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். யக்ஞத்திலிருந்து எல்லா பொருட்களும் கிடைக்க முடியும். ஏதாவது ஒளித்து வைத்தீர்கள் என்றால், புத்தி அவசியம் அதில் தொங்கிக் கொண்டிருக்கும். பாபாவின் கட்டளையாவது - சிவபாபாவின் களஞ்சியம் ஆகும். குழந்தைகளுக்கு எல்லாமே கிடைக்க வேண்டி உள்ளது. இன்னாரிடம் அழகான புடவை இருக்கிறது. நாமும் அணிவோம் என்று அப்பேர்ப்பட்ட எண்ணம் கூட வரக் கூடாது. அட, நீங்கள் தந்தையிடமிருந்து இராஜ்யத்தின் ஆஸ்தி பெற வந்துள்ளீர்களா, இல்லை புடவையின் ஆஸ்தி பெற

வந்துள்ளீர்களா? யார் நல்ல சேவை செய்கிறார்களோ அவர்கள் மீது அனைவரும் சமர்ப்பணம் ஆகிறார்கள். நாங்கள் சிவபாபாவின் பண்டாராவிலிருந்து கிடைப்பதைத் தவிர வேறு எதுவுமே அணிந்து கொள்ள முடியாது என்று கூறுங்கள். நாங்கள் யக்ஞத்திலிருந்து தான் பெற்றுக் கொள்வோம். அப்பொழுது பாபாவின் நினைவு இருக்கும் - சிவபாபாவின் பண்டாராவிலிருந்து இது கிடைத்தது. இல்லையென்றால், திருடுதல் போன்ற பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. அட, இங்கு தியாகம் செய்தீர்கள் என்றால், அங்கு மிகவுமே முதல்தரமான பொருட்கள் கிடைக்கும். சிவபாபா அங்கங்கு குழந்தைகளை சோதிக்கவும் செய்கிறார். எவ்வளவு தேக உணர்வு உள்ளது என்று பார்ப்போம். என்ன உணவூட்டினாலும் சரி, என்ன அணிவித்தாலும் சரி...... என்பது உங்களது வாக்குறுதி ஆகும். இதை சிவபாபா கொடுக்கிறார் என்பதை மனதில் புரிந்திருக்க வேண்டும். அந்த அளவிற்கு முதல்தரமான நிலை இருக்க வேண்டும். பாபாவிடமிருந்து முழு ஆஸ்தி பெற வேண்டும் என்றால், ஸ்ரீமத்படி முழுமையான முயற்சி செய்யுங்கள். பாபாவின் ஆலோசனை படி நடவுங்கள். பாபா, மம்மா என்று கூறுகிறீர்கள் என்றால், முழுமையாகப் பின்பற்றுங்கள். அனைவருக்கும் வழி கூறுங்கள். பாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைத்திருந்தது. இப்பொழுது மீண்டும் கிடைத்துக் கொண்டிருக் கிறது. நினைவு யாத்திரை செய்து கொண்டே இருங்கள். நீங்கள் எந்த அளவிற்கு (ருஸ்தம்) சிறந்த போர் வீரர் ஆகிடுவீர்களோ, அந்த அளவிற்கு மாயை பலமாக வரும். நீங்கள் ஏன் குழம்புகிறீர்கள்? ஒரு சில குழந்தைகளுக்கு, பாபா நீங்களோ மிகவும் நல்ல சேவை செய்யக் கூடியவர்கள் ஆவீர்கள் என்று பாபா எழுதுகிறார். மாயையின் புயல்கள் வரும் - ஆயுள் முழுவதும் பிரம்மசரியத்தில் இருப்பீர்களா என்ன? முதுமைப் பருவத்தில் கூட வந்து தலையை சுற்ற வைக்கும் - திருமணம் புரிந்து கொள்ளலாமா? இது செய்யலாமா? மாயை முதியவர் களையும் கூட இளைஞராக ஆக்கி விடும். இது போல துடிக்க வைக்கும். நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள். எவ்வளவு தான் புயல் வந்தாலும் சரி, பாபாவை நினைவு செய்வதால் காப்பாற்றப்பட்டு விடுவீர்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பேராசைக்கு வசப்பட்டு எந்தவொரு பொருளையும் மறைத்து தன்னிடம் வைக்கக் கூடாது. தந்தையின் கட்டளைப்படி நடந்து கொண்டே இருக்க வேண்டும்.

2. பாபா என்ன உணவூட்டுகிறாரோ, என்ன அணிவிக்கிறாரோ, ஒரு சிவபாபாவின் பண்டாராவிலிருந்து தான் பெற வேண்டும். தேக அபிமானத்தில் வரக் கூடாது. மம்மா, பாபாவை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

வரதானம் : அனைத்து பொக்கிஷங்களையும் பகிர்ந்து கொடுத்தும் அதிகரித்துக் கொண்டும் எப்பொழுதும் நிரம்பியவராக இருக்கக்கூடிய பாலகன் மற்றும் எஜமானர் ஆகுக !

தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் ஒன்று போல பொக்கிஷங்களை கொடுத்து பாலகன் மற்றும் எஜமானராக ஆக்கி உள்ளார். கஜானாக்கள்

அனைவருக்கும் ஒன்று போல கிடைத்துள்ளது. ஆனால் ஒருவேளை யாராவது நிரம்பியவராக இல்லை என்றால் அதன் காரணமாவது கஜானாக்களை பாதுகாப்பாக வைக்கவோ அல்லது அதிகரித்துக் கொள்ளவோ தெரியவில்லை. அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறையாவது பகிர்ந்து கொடுத்தல் ஆகும் மேலும் பாதுகாப்பாக கஜானாக்களை பராமரிப்பதற்கான வழிமுறையாவது கஜானாக்களை திரும்ப திரும்ப செக் செய்வது (சோதித்துக் கொள்வது,) அட்டென்ஷன் (கவனம் வைத்தல்) மற்றும் செக்கிங் சோதித்தல் இந்த இரண்டு காவலாளிகளும் சரியாக இருந்தார்கள் என்றால் கஜானாக்கள் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கும்.

சுலோகன்: ஒவ்வொரு செயலையும் அதிகாரித் தன்மையின் நிச்சயம் மற்றும் (நஷா) போதையுடன் செய்தீர்கள் என்றால் உழைப்பு செய்ய வேண்டி இருக்காது.